ஒற்றுமை என்பது வேறுபட்ட அருள் கொடைகள் அனைத்து கிறிஸ்துவர்களின் நலனுக்காகக் தூய ஆவியாரால் வாழ்வாக வழங்கப்பட்டது.

- திருத்தந்தை பிரான்சிஸ்

உலகமயமாக்கப்பட்ட உலகம் இன்று மக்களையும் உள்கட்டமைப்புகளையும் வலைப்பின்னல் போன்று இணைத்துள்ளது. கிட்டத்தட்ட வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும், குறிப்பாக உள்ளும் புறமும், தொழில்நுட்பம், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார பரிமாணங்களிலும் நாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளோம். மேலும் ஒன்றையொன்று சார்ந்தும் இருக்கிறோம்.

இந்த 21 ஆம் நூற்றாண்டு " உலகளாவிய கிராமம்" அதே நேரத்தில் கோடிக்கணக்கான மனிதர்களின் உள்ளார்ந்த கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கும், உணவு, தங்குமிடம், மற்றும் உடைகள் போன்ற மிக அடிப்படையான பொருள் தேவைகளை வழங்குவதற்கும், அடிப்படை கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, மற்றும் முதியவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும், மிக முக்கியமாக, நமது இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கும் நமது இயலாமையின் வெளிப்பாடுகளில் வெளிப்படையான முரண்பாடுகளையும் சவால்களையும் எதிர்கொள்கிறது.

ஜூபிலி ஆண்டில் திருஅவை புனித கதவுகளைத் திறப்பது என்பது இயேசுவை நம் அனைவருக்கும் பரிசாகக் கொண்டாட கடவுளின் வீடு, மக்களின் வீடாகும் என்பதை கடவுளின் அனைத்து மக்களுக்கும் நினைவூட்டுவதாகும். இதனால், ஒருவருக்கொருவர் பரிசாக இருப்பதற்கான நமது கொண்டாட்டத்தை நாம் சந்திக்க முடியும். நம்பிக்கைக்காக ஏங்கும் உலகத்துடனும் அன்பின் கடவுளுக்காகக் காத்திருக்கும் மக்களுடனும் நாம் பெற்றுள்ள பரிசாக இயேசுவை வழங்குவதற்கான பலத்தை நமக்குத் தருவது நாம் பகிர்ந்து உட்கொள்ளும் நற்கருணையே.

நாம் நம்பிக்கையின் திருப்பயணிகள். நம்பிக்கையும் அன்பும், கடவுளின் அன்பில் முழுமையாக வாழ்வதற்கும் ஒருவருக்கொருவர் அன்பாக இருப்பதற்கும், மாற்றப்பட்ட கடவுளின் மக்களால் ஆன ஆயர்மாமன்ற திருஅவையிடமிருந்து மட்டுமே வழிந்தோடமுடியும். "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" நபர்களைப் புதுப்பிக்கவும், திருஅவையை சீர்திருத்தவும், இந்த ஒரு இறைவேண்டல், கடவுளின் ஆட்சியை மீட்டெடுப்பதற்கு நமது ஒரே வழியாக இருக்கவேண்டும். கடவுளின் இரக்கம் மற்றும் நற்பேறு தேவைப்படும் மற்றவர்களுடன் தந்தையின் அரசுக்கு ஒன்றாகப் பயணிக்கும் நாம் தான் ஒரே திருஅவை.

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 43: 16-21

திருப்பாடல்: 126:1-6

பிலிப்பியர் 3: 8-14

யோவான் 8: 1-11

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2025

பங்களிப்பு: மாமறைமாவட்ட மனித வள மேம்பாட்டு அலுவலகம் (AOHD
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | தவக்காலம் 5 ஆம் ஞாயிறு | 6 ஏப்ரல் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**



மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சமுதாயம் - நல்லிணக்கத்தை நோக்கிய அழைப்பு

## எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும்

யோவான் 17:21

இன்று வேகமான, பலபணிகளை ஒரே நேரத்தில் செய்யும் திறன், நிரந்தரமாக ஆக்கிரமிக்கப்பட்ட உலகம், இன்று உலகெங்கிலும் உள்ள நாடுகளில் மனித துன்பங்கள் அலட்சியமாக்கப்பட்டு வருகிறது. தெய்வீக ஊக்குவிப்பால் ஈர்க்கப்பட்ட மனித நாகரீகங்களில் ஆழமாகப் பதிந்துள்ள கடவுள், புனிதம், தெய்வீகம் மற்றும் உன்னதம் ஆகியவற்றின் மீதான நுட்பமான மற்றும் வெளிப்படையான வெறுப்பிலிருந்து வருகிறது.